# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்-8 வள்ளுவர் ஆண்டு 2029 தை 1 புதன்கிழமை (14-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 43


# ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் 5 வேட்புமனுக்களும் ஏற்பு!

## மற்றைய கட்சிகள் எவையும் ஆட்சேபிக்காத காரணத்தினால்

கொழும்பு, ஜனவரி 14

யாழ். குடாநாட்டில் ஐந்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பாக நிராகரிக்கப்பட்ட - ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் - வேட்பாளர்கள் பட்டியல் ஐந்தையும் ஏற்றுக்கொள்ளும்படி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

மேற்படி ஐந்து வேட்பு மனுக்களும் தேர்தலுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதை சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர் ஆகியோரும் தேர்தலில் போட்டியிடும் ஏனைய கட்சிகளும் ஆட்சேபிக்காததை அடுத்து, அந்த வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஹெக்டர் எஸ். யாப்பா, என். டி. வினியன் ஜயசூரிய ஆகியோர் முன்னிலையில் இந்த மனுக்கள் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டன.

தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கே. ஸி. கமலசபேசன் மேற்படி ஐந்து வேட்புமனுக்களையும் தேர்தலுக்கு ஏற்

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் மனுக்களை ஏற்க புளொட் தொடர்ந்து ஆட்சேபனை

### நீதிமன்றத்தில் நாளையும் விசாரணை

கொழும்பு, ஜன. 14

யாழ்ப்பாணம் மாநகர சபை, வலிகாமம் வடக்கு பிரதேசசபை ஆகியவற்றிற்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை தேர்தலுக்கு ஏற்று அங்கீகரிக்க தேர்தல் ஆணையாளரும் சட்டமா அதிபரும் நீதிமன்றத்தில் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் –

இது தொடர்பான வழக்கில் பிரதிவாதிகளாக புளொட் அமைப்பின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா எதிர்ப்புத் தெரிவித்தார்.

அதனையடுத்து கூட்டணியின் வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதா என்ற விவகாரம் குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது விசா

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## படை - பொலீஸை இணைத்து தேர்தலுக்கு விசேட படையணி

### கட்சிகளின் ஆயுதங்களையும் களைவராம்

கொழும்பு, ஜன. 14

யாழ். உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக பொலீஸாரையும், ஆயுதப் படையினரையும் உள்ளடக்கிய விசேட படையணி ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் படையணி தேர்தல் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவதுடன் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்களின் ஆயுதங்களைக் களையும் பணியிலும் ஈடுபடும்.

தேர்தல் ஆணையாளர் அண்மையில் கட்சி ஆதரவாளர்களின் ஆயுதங்களைக் களையுமாறு பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதன்பயனாகவே விசேட படையணி ஒன்று ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையில் –

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பணிகளுக்காக அந்த மாவட்டத்தில் உள்ள சகல உத்தியோகத்தர்களின்சேவை பெறப்படும் என்றும் –

தேவைப்படும் இடத்து மேலதிக உத்தியோகத்தர்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்படுவர் என்றும் –

தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த... [illegible]

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ராகிங் படுகொலை:

## 23 சந்தேக நபர்கள் நேற்று அடையாளம் காட்டப்பட்டனர்

மட்டக்களப்பு, ஜன. 14

அம்பாறை ஹாடி தொழில்நுட்பக்கல்லூரி மாணவன் செலும் துஷாரா விஜயதுங்க 'ராகிங்' வதையால் மரணமானது தொடர்பான சந்தேக நபர்களான — சிரேஷ்ட மாணவர்கள் 24 பேரில் — 23 பேர் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டனர்.

மேற்படி மாணவன் கடந்த 29 ஆம் திகதி மரணமானார்.

இச்சம்பவம் குறித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 24 மாணவர்களும் நேற்று அம்பாறை நீதிமன்றத்தில் நடைபெற்ற...

(10 ஆம் பக்கம் பார்க்க)


உதயன் நாளை இல்லை

பொங்கல் தினத்தை முன்னிட்டு உதயன் ஊழியர்களுக்கு இன்று விடுமுறை நாள். இதனால் உங்கள் உதயன் நாளை வெளிவராது.

– நிர்வாகத்தினர்,


## கூட்டணி போட்டியிடுவதை 'புளொட்' விரும்பவில்லை

### ஆனந்தசங்கரி குற்றச்சாட்டு

லண்டன், ஜன. 14

''நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதை புளொட் விரும்பவில்லை அதனால் தான் ஆட்சேபனை மனுத் தாக்கல் செய்துள்ளனர்'' –

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் ஆனந்தசங்கரி பி. பி. ஸி க்கு தெரிவித்தார்.


தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பு மனுவை ஏன் புளொட் ஆட்சேபிக்கிறது என்று அவரிடம் கேட்ட போதே அவர் இப்படிக் கூறினார்.

நாம் சமர்ப்பித்த மனு மீதான தீர்ப்பு 15 ஆம் திகதி தெரியவரும் என்று அவர் பி. பி. ஸிக்கு நம்பிக்கை வெளியிட்டார்.

(உ-3)


வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், முகவர்கள் அனைவருக்கும்

உதயனின்





### நாடு கடத்தலை ஆட்சேபித்து

## கனடா தமிழர்கள் உண்ணாவிரதம்!

லண்டன், ஜன. 14

உலகத் தமிழ் இயக்க ஒருங்கிணைப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷை இலங்கைக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி நாடு கடத்துவதென்று கனடா அரசு எடுத்துள்ள முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி கனடாவில் உள்ள இலங்கைத் தமிழ் மக்கள் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி சுழற்சி முறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

அவர் சிறை வைக்கப்பட்டுள்ள ரொறண்டோ நகரச் சிறைச்சாலை முன்பாக அமைக்கப்பட்ட கொட்டிலில் பல தமிழர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை உறைய வைக்கும் கொடும் பனிக் குளிருக்கு மத்தியில் — மேற்கொண்டுள்ளனர்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வெடி விபத்தில் ஐந்து புலிகள் பலி!

வவுனியா, ஜன. 14

வன்னியில் நேற்று நடந்த தவறுதலான வெடி விபத்து ஒன்றில் நான்கு புலிகள் களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது.

அறிஞன் (செல்வரத்தினம் அறிவழகன் - யாழ்ப்பாணம்), இசைத்துறை (நெல்சன் சதிய சீலன் — கொழும்பு), குணாளன் (ராஜசிங்கம் துஷ்யந்தகுமார் — வவுனியா), நாதன் (மரியநாயகம் மைக்கல்ஜுட் — நெடுந்தீவு). ஆகியோரே மரணமானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி மன்

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இலங்கை

# இந்துமத குருமார் ஒன்றியம்

## பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

தைத் திருநாளாம் இப்புனித நாளில் ஆலயங்கள் தோறும் இறைபணியாற்றிவரும் குருமார்களுக்கும், ஆலயங்களைப் பரிபாலனஞ் செய்து வரும் அன்பர்களுக்கும் அனைத்து மக்களுக்கும் இந்துமத குருமார் ஒன்றியம் தனது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. இப் பொங்கல் நன்னாளில் பழையனவற்றைக் களைந்து புதுப்பொலிவுடன் நிகழும் இல்லங்களில் புதுப்பானையில் புத்தரிசி கொண்டு புத்துணர்வுடன் பொங்கி விநாயகப் பெருமானுக்கும், சூரியபகவானுக்கும் அர்ப்பணித்து சுற்றத்தாருடன் இனிதே உண்டு மகிழ்கின்ற நாம், ''தை பிறந்தால் வழிபிறக்கும்'' என்ற நம்பிக்கையில் வாழும் வளம் குன்றிய நண்பர்களையும் கருத்திற் கொண்டு, அவர்தம் துயர் அகன்று சுபீட்சமுடன் வாழ வைப்பதற்கு எம்மாலான உதவிகளைச் செய்ய இந்நன்னாளில் உறுதி பூணுவோமாக!

ஆலயங்களைப் பேணிக் காத்து உண்மையான சமயவாழ்வு மேலோங்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக! அனைத்து மக்களும் நாடும் நலமே வாழவும் அவலம் நீங்கி சுபீட்சமும் அமைதியும் ஓங்கவும் இறைவன் திருவருள் பொலிவதாக!

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க-

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம்

யாழ்ப்பாணம். (52626)


# இறந்தோர் எண்ணிக்கை 60 ஆக உயர்வு

பெய்யிங், ஜன. 14

சீனாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது.

இதில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரம் ஆகும். இவர்களில் சுமார் 350 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. 12 ஆயிரம் வீடுகள் வரை தரைமட்டமாகியுள்ளன. ஆயிரத்து 600 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்கள் சேதமடைந்துள்ளன. (இ-

# பாலபண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜன.14

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச பாலபண்டித வகுப்புக்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றன.

வாரத்தில் பிரதி 5 தினங்களும் இந்த வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

(இ-5)


# பொங்கல் வாழ்த்துக்கள்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் யாவருக்கும் எமது மனமுவந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## கிளானி முகவர் தபால் நிலையம்

[இரவு, பகல் உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவைகள் கிடைக்குமிடம்]

67, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 2201, 2204

(52627)

# நிதான விலை

தொலைக்காட்சிப்பெட்டிகள், வானொலிப்பெட்டிகள், கல்குலேட்டர்கள், வீடியோ டெக்குகள், அன்ரனா வயர் பூஸ்ரர், சோலர்கள், கடிகாரங்கள், மின்உபகரணங்கள், அழகுசாதனப் பொருள்கள். பிளாஸ்ரிக் பொருள்கள் முதலியவற்றை நிதான விலையில் பெற இன்றே நாடுங்கள்;

## நியூ சிற்றி ரேடர்ஸ்

135. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(52490)



வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய

# பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

நேரம் அனைவருக்கும் முக்கியம்
காலம் பொன் போன்றது
உங்கள் மணிக்கூடுகள்
சரிவர இயங்கவில்லையா?
அதற்கென்றே யாழ். நகரில்
நிபுணத்துவம் பெற்றவர்கள்

## சிவாஸ்

## மணிக்கூட்டுத் தொழிலகம்

568-B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தங்கள் ஆதரவிற்கு நன்றி!

(சி/2603)


# கணிப்பு நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம், ஜன. 14

அரியாலைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் தற்போதைய நிலவரத்தை மதிப்பிடும் நோக்கில் ''தேவைகள் கணிப்பு'' ஒன்று நடத்தப்பட்டுவருகிறது.

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில், அப்பகுதியில் உள்ள ஜி சீ ஈ (உயர்தர) பரீட்சை எழுதிவிட்டு இருக்கும் மாணவர்களைக் கொண்டு இந்த கணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

20 ஆண்களும், 19 பெண்களும் இந்தப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்தப்பகுதியில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப்பணி பற்றிய விவரங்களை இவர்கள் சேகரித்து வருகின்றனர்.

(இ-3)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி புவனேஸ்வரி முருகேசு

மலர்வு: 20 - 09 - 1950

உதிர்வு: 15 - 12 - 1997

அன்பும் பண்பும் கனிவும் கொண்டு, எங்களை வழிநடத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும், உங்கள் நினைவுகள் எங்கள் பாச நெஞ்சங்களை விட்டு நீங்காதம்மா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இல. 01 பொலிஸ் விடுதி திருகோணமலையில் நடைபெறும் [16. 1. 98] அந்தியேட்டிக் கிரியையிலும் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தகவல்:
மகன்: ராஜன்
சகோதரர்: சதாசிவகுமார் (S. I.)

இல. 01, பொலிஸ் நிலைய விடுதி,
திருகோணமலை. [சி/2630]


பொங்கல் வாழ்த்துக்கள்

எமது வீடியோ CD வெளியீடுகள்

- ☐ திருவருட்செல்வர்
- ☐ நவராத்திரி
- ☐ தேன்நிலவு
- ☐ நெஞ்சிருக்கும்வரை

எமது அடுத்த வெளியீடு!

சரத்குமாரின் மூவேந்தர்

புதிய பட போஸ்ரர்களும் விற்பனைக்குண்டு.

## வீடியோவிமல்

யாழ்ப்பாணம்.

(சி/2646)

## லிபேட்டி சினிமா

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்

இன்று முதல்

விஜய், குமாரி சாளினி நடித்த

காதலுக்கு மரியாதை

(புதிய வெளியீடு)

பழையகோசப் :
[illegible]

(52238)


# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் பொன்னம்பலம்

(Drilling Forman - Irrigation Dept. [Colombo)

பொற்பதி வீதி, கொககுவில் கிழக்கைச் சேர்ந்த மாணிக்கம் பொன்னம்பலம் 7-1-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-01-98 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோண்டாவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
க. செந்தில்வடிவேல் (மருமகன்)

பிரதேச செயலகம்,
வீரகாவற்றுறை (52629)

அருட்சகோதரி

## சூசன் லூக்காஸ்பிள்ளை தி. கு.

பத்தாவத்தை இளவாலையைப் பிறப்பிடமாகவும், திருக்குடும்பக் கன்னியர் மடம், பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்சகோதரி சூசன் லூக்காஸ்பிள்ளை அவர்கள் 13-01-1998 செவ்வாயன்று தமது 101 வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

இவரது பூதவுடல் 14-01-1998 பி. ப. 3—30 மணிக்கு, திருக்குடும்ப கன்னியர் மாகாண இல்லத்திலிருந்து யாழ்-புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவரது ஆன்மா சாந்தியடைக

தகவல்;
அருட்சகோதரி எமிலியானா

மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். (52624)

## சிவசுப்பிரமணியம் சோதிமலர்

உடுப்பிட்டியைச் சேர்ந்த சோதிமலர் (சுசி) 9-1-98 அன்று வவுனியாவில் அகால மரணமானார்.

தற்போது விசுவமடுவில் வசிக்கும் சிவசுப்பிரமணியம் (ஆச்சார்)—பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகளும், விமலநாதன் (ேபாகா), சுரேஸ்குமார், ரமேஸ், ஜீவமலர், கோணேஸ், தயானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராஜா — கனகம்மா தம்பதிகளின் பேறாமகளும், நகுலேஸ்வரியின் மைத்துனியும், ஹம்சாராணியின் அத்தையும், பரமேஸ்வரியின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 15-01-98 வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S. தயானந்தன் (சகோதரன்)

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (52610)

## டாக்டர் கனகசபை செல்வபாரதி

[ஆயுர்வேத வைத்தியர்]

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த டாக்டர் கனகசபை செல்வபாரதி 13-01-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராச வைத்தியர் கனகசபையினதும் நாகரெத்தினத்தினதும் அன்பு மகள் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (14-1-98) புதன்கிழமை பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக விலலூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
சற்குணம் (பேறாமகள்)

396, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (52628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த

**தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!**

உங்கள் இல்லங்களில் நடைபெறும் பூப்புனித நீராட்டு,
திருமணம் போன்ற

**"மங்களகரமான வைபவங்களுக்கு"**

சொக்கட்டான், வில்லு, சந்தி முறிப்பு +, T, L வடிவங்களில் அலங்காரப் பந்தல் அமைத்து, மணவறை, சோடனைகள், இரும்புக் கதிரைகள் பிளாஸ்டிக் கதிரைகள், பாய்கள், சமையற் பாத்திரங்கள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

# T. N. பந்தல் சேவை

காளி கோயிலடி,
மல்லாகம்.

(52483)



யாழ். கல்வித் திணைக்களம் -
வலயம் - I வழங்கும்

# பொங்கும் இசை விழா

இடம்: யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
நாள்: 1998 - 01 - 14 புதன்கிழமை
நேரம்: காலை 9.00 மணி

யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்கள் இணைந்து வழங்கும் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும். அனைத்துப் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், ஊழியர்கள், பெற்றோர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

விழாக் குழுவினர்

கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.

(இ/2639)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
வர்த்தகர்கள்
அனைவருக்கும் தமது பொங்கல் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
மிக்க மகிழ்ச்சியடைகின்றார்கள்

**நந்தினி நகைமாட ஸ்தாபனத்தார்.**

உலகம் வியக்கும் உன்னத நகைத் தெரிவுக்கு

# நந்தினி நகைமாடம்

(புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு)

218 G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(2633)



புகைப்பட உலகின் வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும் நன்கு அறிமுகமான

**சித்திரகலா படப்பிடிப்பாளர்களின்
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்**

உங்கள் மங்கள வைபவங்களுக்கான வர்ணப்படம், கொம்பியூட்டர் பாஸ்போட்டுக்கான வர்ணப்படம், பாஸ் போட், அஞ்சல் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை வர்ணச் சுருள் படம் பிரதியாக்கல் அத்துடன் படங்களைத் தேவையான அளவுகளில் பெருப்பித்து குறித்த தவணையில் மிகவும் குறைந்த விலைக்கு சிறந்த முறையில் பெற்றிட, உங்கள் மனங்களில் நீண்டகாலமாக நீங்காத இடம் பெற்றவர்களும் புகைப்படக்கலையில் நன்கு அனுபவம் மிக்கவர்களுமான

உங்கள்

# 'சித்திரகலா படப்பிடிப்பாளர்'

3, செட்டித்தெரு லேன்,
நல்லூர்.

(51534)



வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்

**குலம் கிறீம் ஹவுஸ்**
ஸ்தாபனத்தாரின்
**இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!**

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற
ஸ்பெஷல் ஐஸ்கிறீம், சொக்லெட் ஐஸ்கிறீம், ஜெலி ஐஸ்கிறீம், வெனிலா ஐஸ்கிறீம், மட்டன ரோல், மிக்சர், லட்டு, பட்டர் கேக் வகைகள், மஸ்கட் ஸ்பெஷல் பீடா இவை அனைத்தையும் ஒரே இடத்தில் சுவைத்து மகிழ இன்றே நாடுவீர்:

# குலம் கிறீம் ஹவுஸ்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(இ/2629)



# பொங்கல் வாழ்த்து

இந் நன்னாளில் அனைவரையும் வாழ்த்துகிறோம்

★ முறிவு நெரிவு உட்பட சருமரோகம
★ குழந்தை மருத்துவம
★ பெண் நோயியல்
★ மகப்பேறின்மை

மற்றும் சகல ரோகங்களுக்கும்
(முக்கியமாக ஆண்மைக்குறைவு)
சிகிச்சை அளிக்கப்படும்.

வைத்திய கலாநிதி
**ஏ. உமாகாந்தன்**
நாயன்மார்கட்டு
முறிவு நெரிவு வைத்தியசாலை
செம்மணி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(52525)



தமிழ் மக்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த

**பொங்கல் வாழ்த்துக்கள்!**

| | | |
|---|---|---|
| **அஜந்தாஸ்** | **அஜந்தா** | **அஜந்தாஸ்** |
| ரெக்ஸ்ரைல்ஸ் | ரேடேர்ஸ் | ரெக்ஸ்ரைல்ஸ் |
| 54, பெரியகடை, | 66, கஸ்தூரியார் வீதி, | 25, 4ஆம் குறுக்குத் தெரு, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(52580)



வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது உளம் கனிந்த
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



# திரு வீடியோ விஷன்

கலர் படப்பிடிப்பாளர்கள்

உங்கள் இல்லங்களில் நிகழும் அனைத்து மங்களகரமான நிகழ்வுகளையும்,
நவீன கம்பியூட்டர் வீடியோ சாதனங்கள் மூலம் துல்லியமான முறையில் படம் பிடித்துத் தருபவர்கள் திரு வீடியோ விஷன் ஸ்தாபனத்தார்.
உங்கள் சகல தேவைகளுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**"திரு வீடியோ விஷன்"**

[illegible] கோவிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(52575)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் பொங்கல் மலர்


உ

எங்கள் வளர்ச்சிக்குத்துணைநின்ற வாடிக்கையாளர்கள், வர்த்தகர்கள், அன்பர்கள், நண்பர்கள், அனைவருக்கும்

தமது புத்தாண்டு, பொங்கல் நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்கின்றார்கள்

சானுகா ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தார்!

[illegible] நகைத்தெரிவுக்கு ராசியான இடம்

**சானுகா ஜுவல்லர்ஸ்**

(அழகு நகைகளின் அரங்கம்)

இல. 198H, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2632)


## அருளுவாய் புதிய "தை"யே!

சமர்மூல மாகவே அமைதியைக் காணலாம்
எனப் பேசும் சந்திரிகாவும்
தமிழீழ மொன்றுதான் தமிழரைக் காத்திடும்
என்று நம் பும்பிரபாவும்
தமக்குளே இருந்திடும் முரணினைப் போக்கவே
தடை நீக்கிப் பேசவைப்பாய்
அமைதியும் உரிமையும் இணைப்பையும் அருளுவாய்
அழகு சால் புதிய 'தை'யே!

இரத்தத்தில் வத்தையை ஒட்டவே முனைகின்ற
இழிகுணம் மாறவேண்டும்
வருத்தத்தில் மக்களை ஆழ்த்தியே வீழ்த்திடும்
வன் செயல் நீங்க வேண்டும்
பொருத்தத்தை உணராமற் பொதியினைத் திணிக்கின்ற
போக்குமே மாற வேண்டும்
திருத்தங்கள் ஏற்றிடும் பண்பெனும் திண்மையால்
திரு நாடு வாழ வேண்டும்!

சொல்வதுஞ் செய்வதுஞ் சிறந்த நம்வாழ்க்கையை
செம்மை யாய் ஆக்க வேண்டும்
தொல்லையும் துயரமும் தூர்ந்துபோய் மடிந்திடும்
தூய தாம் தீர்வு வேண்டும்
சொல்வதைக் காணாமற் போவதைச் செய்வதை
இல்லை யாய் ஆக்க வேண்டும்
அல்லலை நீக்கியிவ் வனைத்து வேண்டுதல் பொங்க
அருளுவாய் புதிய 'தை'யே!

- சிற்பி


பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸின்

**பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகை, பிஸ்கட், இனிப்பு, பீடா ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகலவிதமான மூலப் பொருள்களுக்கும்

ஊதுபத்தி, சாம்பிராணி, வாசனைத் திரவியம்
ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கும் மூலிகை வகைகள்
குங்குமம், குங்குமப்பூ, எண்ணெய், நெய், பிஸ்கட், சொக்லேட்,
சாப்பாட்டு இரசாயனப் பொருள்கள், டொபி வகைகள்,
எசன்ஸ் வகைகள், எமல்சன் வகைகள், கலர் பவுடர் வகைகள்,
கேக் தயாரிக்கும் பொருள்கள், கேக் அலங்காரப் பொருள்கள்,
அச்சகத்துக்குத் தேவையான காகிதாதிகள், மை வகைகள்
ஆகியவற்றுக்கு

யாழ். நகரில் பெயர் பெற்றவர்கள்

**பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் & பேப்பர் மேர்ச்சன்ட்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

109, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

(சி-2606)


## தை மகளைப் போற்றிடுவோம்

ராகம்:- மோகனம் தாளம்:- ஆதி

பல்லவி

தைமகளே! வருகவென்றே வாழ்த்துப்பாடுவோம்
— தமிழ்த்
தைமகளே! அருள்கவென்றே போற்றிப்பாடுவோம்
— இன்று
—[தை...]

அனுபல்லவி

மனையெல்லாம் மாவாலே கோலம் போடுவோம்
— எங்கும்
மாவிலைகள் தோரணத்தால் கோலம் செய்குவோம்
— எங்கள்
— [தை...]

சரணம்

செந்நெல்லின் அரிசியிலே பொங்கல் செய்குவோம்
— அதில்
செந்தேனும் நெய்யுமிட்டுப் பொங்கச் செய்குவோம்
— வளர்
செங்கரும்புச் சாறுமிட்டுப் பொங்கல் செய்குவோம்
— உயர்
செந்தமிழாற் பாட்டிசைத்துப் பொங்கச் செய்குவோம்
இன்று
— [தை...

கதிரவனின் அருள்தன்னைப் போற்றிசெய்குவோம்
— உழும்
காராளரின் கரங்களையே வாழ்த்திப்பாடுவோம்
—வயல்
உழுதவரும் ஆவினத்தை ஏத்திப்பாடுவோம்
—அயல்
உவந்திருக்க அமுதளித்து வாழ்த்துப்பாடுவோம்
—எழும்
—[தை
நலம்பலவும் பொலியவென்றே அவளையழைக்கிறோம்
— சூழும்
இடர் பலவும் மறையவென்றே அவளையிரக்கிறோம்
— தேடும்
வளம் பலவும் மலியவென்றே அவளையேற்கிறோம்
— மூடும்
இருள் பலவும் மறையவென்றே கரங்கள் குவிக்கிறோம்
— கோலத்

—முருகு


மகாநதியின்



இனிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதயங்கனிந்த தித்திக்கும்

**தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!**

இன்றைய உலகில் நாளுக்கு நாள் அறிமுகமாகும் நாகரிகத்தை உடனுக்கு உடன் இங்கு அறிமுகப்படுத்துபவர்கள்
ஆம்
சிறியோர் முதல் பெரியோர் வரை கண்ணுக்கினிய கவர்ச்சியான புடைவைத் தெரிவுகளுக்கு

**மகாநதி புடைவையகம்**

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

4, நவீன சந்தை, [illegible]

(சி/2605)



வாடிக்கையாளர், நண்பர்கள் ஆதரவாளர்களுக்கு

**மங்களப் பொங்கல் வாழ்த்துக்கள்!**

கல்யாண வைபவங்களுக்குத் தேவையான

- ★ கூறைத் தினுசுகள்
- ★ பட்டு வேட்டி சால்வைகள்

மற்றும் உயர்ந்தரக புடைவைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

**சீமாட்டி புடைவைக்கடல்**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

கிளை - மங்கை சில்க், சுன்னாகம், யாழ்ப்பாணம்.

(சி/2607)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தைப்பொங்கல் பொன்னாளே

# தமிழர்களின் தேசியத் திருநாள்

தைப்பொங்கல் தமிழர் வாழ்வில் ஓர் இன்ப நாள். புத்தாண்டுப் புதுநாள்! உழவர் திருநாள். தொழிலாளர் நன்னாள்.

இன்று முதல் தமிழரின் வாழ்விலே ஒரு புதுமை காணப்படும். அந்தப் புதுமை தோன்றுவதைக் காட்டும் குறியாகக் கொண்ட விழாவே பொங்கற் பொன்னாள்!

அந்தப் புதுமை செயற்கையல்ல; இயற்கை. கற்பனையல்ல; உண்மை.

பழம் பொங்கலின் இறுதி நாள் தான் போகிப் பொங்கல். எனவே பொங்கல் ஓர் ஆண்டின் எல்லையைக் குறிக்கின்றது.

ஞாயிறு தென்திசைநோக்கி நகர்ந்து மறுபடியும் வடதிசை நோக்கித் திரும்புகிறது. ஞாயிறு தென்திசை நோக்கிச் சாய்ந்து விடாமல் மறுபடியும் திரும்புவது ஞாயிறு பொங்கல் பொங்கி எழுதல் எனலாம்.

எனவே, போகிப் பொங்கல், கதிரவன் தென்திசை போகிய பொங்கல் எனவும், ஓர் ஆண்டுப் போகிய பொங்கல் எனவும், முதல் பொங்கலின் பின் சமைத்த — புளங்கிய உணவுப் பொருள்கள் போகிய பொங்கல் எனவும் கருத இடம் தருகின்றது.

மற்றும் போகிப் பொங்கலன்று பழைய பொருள்களையெல்லாம் போக்கிவிட்டுப் பொங்கலன்று எல்லாம் புதுப் பொருள்களாகவே கொள்ளும் வழக்கை நோக்கின், ''போக்கும் பொங்கல்'' என்பதே மருவி போகிப் பொங்கல் எனவந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு.

**அ.பொ செல்லையா**

பொங்கல் முதல் நாளோடு பழைய ஆண்டு கழிந்து விடுகிறது. தமிழருக்கு புதிய ஆண்டு பிறந்து விடுகிறது. பழையன கழிந்து புதியன புகுந்து விடுகிறது. புதுப் புனல், புது நெல் அரிசி, புத்தாடை, புதுப்பொங்கல்!

இன்றோ பொங்கல் பொங்கிவிட்டது. புத்தாண்டு மலர்ந்து விட்டது. தமிழர் அகமெல்லாம் மலர்ந்து விட்டது. ஈழத்தில் மட்டுமல்ல உலகில் எங்கெங்கு தமிழன் வாழ்கிறானோ அங்கெல்லாம் அவன் மனம் பூரிக்கின்றது. சாதி, மத, வேறுபாடுகள் அற்ற சமயச் சாயல் படியாத தமிழர்களின் பண்பாட்டுத் தன்மையில் அமைந்த வண்மையான நாள் பொங்கல் பொன்னாளாகும்!

புதுமை கலந்து, புத்துணர்வுடன் புது வேகமாகப் பணியாற்றுவது நாட்டின் நல்வாழ்விற்கு, எழுச்சிக்கு, வளர்ச்சிக்கு, மறுமலர்ச்சிக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை எடுத்துக் காட்டும் மறுமலர்ச்சி நாள் இந்தப் பொங்கல் நாள்.

பொங்கல் தமிழரின் மே தினம்! உழைப்பாளர்க்கே உணவுண்டு என்பதன் கருத்து விளக்கம். தமிழரின் தேசியத் திருநாள் அது.

இந்நாள் ஈழத்தமிழர் வாழ்விலும் இன்பம் பொங்கிட, இன்னல்கள் யாவும் நீங்கி, இதயத்தில் மகிழ்வால் இன்பம் பொங்கி, ''தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு. அமிழ்தம் அவனுடைய மொழியாகும், அன்பே அவனுடைய வழியாகும்'' என்பதை நிலைநாட்டிடப் பண்பெனப் படுவது பாடறிந்தொழுகுதலாகும் என்ற அடிப்படையில் இவ்வாண்டுப் பொங்கல் வழி சமைத்திடவேண்டும். பொங்கல் பொன்னாள்! இன்பத் திருநாள்! தமிழர் வாழ்வில் இன்பம் பொங்கட்டும் வாழ்க தமிழ்! ★

மங்கலப் புடைவையின்
மகிழ்ச்சி கண்டு

மனை பொங்க,
மனம் பொங்க,
மங்கையின் இதயம் மகிழ்ச்சியில் பொங்க, —
இல்லம் பொங்க, உற்றம் உவகையில் பொங்க,
மங்கலப் பொங்கலில் மகிழ்ந்து நாம்
வாழ்த்துகின்றோம்.

லலிதா
புடைவை மாளிகை

பொங்கிடும் மங்கையின் இதயத்தில் தங்கிடும்
மங்கலம் பொங்கும பணி நாள்
முகூர்த்தப் புடைவைகளுக்கு

லலிதா
புடைவை மாளிகை

5, 6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
B 3 சந்தை வீதி, வவுனியா.

(52604)


ராகம்ஸ்
வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு
பூரித்திடும்
பொங்கல் வாழ்த்துக்கள்!

என்ன அழகு!
எத்தனை அழகு!!
ராகம்ஸ் பட்டாடைகளின் அழகே அழகு!!!

ராகம்ஸ் பட்டுச் சோலை
24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி/2608)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
குளிர்பானம், பிஸ்கட், பற்றிஸ், பிலிம்றோல் வகைகளுக்கு
சேனா சென்ரர்
274, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(52566)

City
வாடிக்கையாளர்கள், நண்பர்கள், மாணவர்கள்,
அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
சிற்றியின் பொங்கல் வாழ்த்துக்கள்!



நாளைய நாகரிகத்தினை இன்றே அறிமுகப்படுத்தி எடுப்புறத் தைப்பவர்கள்
CITY TAILORS
(Specialist in Wedding Coats & Suits)
★ தரம் ★ விலை குறைவு ★ நவீன டிசைன்களின் தெரிவு ★ நம்பிக்கை
அன்றும் இன்றும் என்றும் கைராசியான புடைவைக் கடல்.
எம்மிடமே கொள்வனவு செய்து தைப்பவர்களுக்கு விசேட சலுகை
அளிக்கின்றோம்.
சிற்றி ரெக்ஸ் & ரெயிலர்ஸ்
(தவசர் திருகுகளின் ராஜ முத்திரை)
73, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
வாடிக்கையாளர்களின் திருப்தியே சிற்றியின் திருப்தி
(சி/2610)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



### வரதராஜன் உமையாள்

மட்டுவிலைச் சேர்ந்த வரதராஜன் பிரபாலினி தம்பதிகளின் செல்வப் புதல்வி உமையாள்

தனது 2 ஆவது பிறந்த தினத்தை கற்குழி வவுனியாவில் இன்று [14 - 1 - 98] தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். உமையாளை அப்பா, அம்மா, கண்ணன் மாமா, மட்டுவில் அம்மப்பா, அம்மம்மா, பொபிசித்தா, பிராங்கிஸ் சுபாஸ்மாமா குடும்பம், நோர்வே சுரேஸ் மாமா குடும்பம், வவுனியா அப்பப்பா, அப்பம்மா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வேம்படி முருகன் அருளால் பல்லாண்டு காலம் நலமே வாழ வேண்டும் என வாழ்த்துகின்றனர்.

தகவல்
க. பொபி.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (52585)

## நன்றி தெரிவிப்பு

குடாநாட்டில் "சூரிய பிரகாசம்" இராணுவ நடவடிக்கையின் பின்னர் காணாமல் போனதாகி தகவலற்று இருக்கும் பிள்ளைகள் தொடர்பாக ஜனாதிபதியை நேரில் சந்தித்து கலந்துரையாட வாய்ப்பை ஏற்படுத்தித்தந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் —

யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் வி. கே. ஜெகனுக்கும் —

மற்றும் யாழ். அலுவலக தோழர்களுக்கும் — நன்றி தெரிவிப்பதாக காணாமல் போனோர், தகவல் தெரியாதுள்ளோர் பாதுகாவலர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.14

யாழ். இந்துசமயப் பேரவையின் முன்னாள் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையாவின் ஞாபகார்த்தக் கட்டுரை மலர் வெளியீட்டு விழா எதிர் வரும் ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். (இ-7)

பொங்கல் தினத்தன்று
குதூகல ஆரம்பம்
(14-1-98)

சென்றல்
வெண் திரையில்
நெல்லியடி (மேல்மாடி)
தினசரி: 10.30. 2.30
(பழைய நேரம்)

படம்;
**காதலுக்கு மரியாதை**

CD பிரதி.

(52616)

வாடிக்கையாளர், விற்பனையாளர் அனைவருக்கும்

Tasty PRODUCTS

## எங்கள் உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

திருகுமூடி ஜாம் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும் Tasty ஜாம், நெல்லி ரசம், ஊறுகாய், சோஸ், கோடியல்.

எங்கும் கிடைக்கின்றன.

சுவையின் மகாராஜன் TASTY

## ரேஸ்ற் லைன் இன்டஸ்ட்ரீஸ் [தனி] லிமிட்.

ஆடியபாதம் வீதி,
(கேணியடி வைரவர் கோயில் அருகில்)
திருநெல்வேலி. (52540)

## இளவரசி களஞ்சியம்

### எமது பொங்கல் வாழ்த்து!

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தில் உழவர் பெருமக்கள், நமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், தொழிலாளப் பெருமக்கள், வர்த்தக நண்பர்கள், யா/மா/பே/உ/சங்க நண்பர்கள் அனைவருக்கும் இப்புத்தாண்டு அமைதி. சகோதரத்துவம், சாந்தி, சமாதானம் இவைகள் கிடைக்க வேண்டுமென இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

உரிமை:– குறள்வழிவள்ளல்
மா. கனகராசா

| | |
|---|---|
| பெயர் மாற்றம் | பெயர் மாற்றம் |
| **இளவரசி பேக்கவுஸ்** | **இளவரசி களஞ்சியம்** |
| (ஐடியல்) | (சுதர்ஷன்) |
| மகாத்மா வீதி, | பிரதான வீதி, |
| நெல்லியடிகரவெட்டி. | நெல்லியடிகரவெட்டி. |

வல்லான் பொருள்குவிக்கும் நிலை நீங்கி -
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை.

(சி/2641)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 16 |
| 10 | 12 |
| 1950 | 1997 |

### அமரர் செல்லையா அருளப்பு

நெஞ்சமெலாம் நிறைந்திருக்கும்
நேர்மைமிகு பண்பாளனே
மிகுந்த அந்த நேர்மையினால்
அனைவரையும் கவர்ந்தவனே
எமையெலாம் தவிக்கவிட்டு
வானுலகம் புகுந்தனையோ?
வாழ்வுதனை முடித்தனையோ?

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான திருப்பலி கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு இடம்பெறும்.

உன் பிரிவால் துயருறும்
சிங்கராஜா, யோசேப், இராயப்பு,
அண்ணன்மார், பெறாமக்கள்,
மைத்துனிமார்.

தகவல்:
சி. ரூபன்,
கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு. (52619)

## மங்களகரமான பொங்கல் வாழ்த்துக்கள்

அனைவருக்கும் உரித்தாகட்டும்

அழகுக்கு அழகு தரும் புத்தம் புதிய நவீன டிசைன்களில் இன்றைய நவநாகரிக புடைவைத் தெரிவுக்கு யாழ். நகரில்

## சோபனா ஆடையகம்

16, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

## வினோ நகைப் பூங்கா

பெண்களின் அழகோ இரகசியம். அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.

அசல் 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் யாழ். நகரில் பெற்றுக்கொள்ள
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2609)

உள்ளத்தாலும் உணர்வாலும் - உண்மையுடனும் உறுதியுடனும்
உங்களுடன் உங்களுக்காகவே

## ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)

(47656)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய Video Mixer MX20 (New Model), Fuji A3 Size Laminator (புதியது) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- திரு வீடியோ விஷன், கரணவாய் தெற்கு, கரவெட்டி. (52574)

### வினாத்தாள்

புலமைப் பரிசில் 10 ஆவது பயிற்சி வினாத் தாள்கள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம். (52555)

### மணமகன் தேவை

இணுவலடி வேளாண்குடி B Sc. கொழும்பில் கற்பிக்கும் 24-10-1966 இல் பிறந்த ரோகிணி நட்சத்திரம் 8 இல் நீச செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேடுகின்றோம். தொடர்பு: V.A. சிவராசா. சோதிடர் 152, B' அரசடி றோட். கந்தர்மடம். [52595]

### நூல்கள்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். நீங்கள் அடிக்கடி வானொலியில் கேட்கும் நாடகங்களை எழுதுகின்ற அராலியூர் ந. சுந்தரம் பிள்ளை எழுதியது வீரகேசரியின் பிரசுரமாகி உலகம் முழுவதுமுள்ள தமிழர்களால் வாசிக்கப்பட்டது. எங்கும் கிடைக்கும். [52528]

### கணனி வகுப்புகள்

ஆரம்பம்: 12 .18 - 01 -98 புதிய நேரம் காலை 8 30 Data Processing, Basic Pascal இலவச வகுப்புக்களுக்கு நேரில் விவரம் அறியவும். ஜி ஸ்ரீதரன், நாவலடி லேன், திருநெல்வேலி. [52398]

### திருமண சேவை

66 ஆம் ஆண்டு சித்திரை நட்சத்திரமுடைய லண்டனில் இருந்து வந்து நிற்கும் மணமகனுக்கு தகுந்த பெண் ஜாதகம் உடையோர் தொடர்பு கொள்ளவும், பெண் London கூட்டிச் செல்லப்படுவார் தொடர்பு: துர்க்கா திருமண சேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (52612)

## யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்

எமது அங்கத்தவர்களுக்கும் ஸ்கந்தா சமூகத்தினருக்கும் எமது மனம் நிறைந்த

**தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!**

பழைய மாணவர்களுக்கும், மாணவர்களுக்கும் ஊக்குவிப்புப் பணம் வழங்குவது தொடர்பாக 07 - 10 - 97 உதயனில் எங்கள் விளம்பரத்திற்கு ஏற்ப எம்முடன் தொடர்பு கொள்ளாதவர்கள் தயவு கூர்ந்து 24–01–98 க்கு முதல் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பும்படி வேண்டுகின்றோம்.

### ஆண்டுப் பொதுக்கூட்டம்

எமது ஆண்டுப் பொதுக்கூட்டம் 15–02–98 இல் நடைபெற இருப்பதால் சமர்ப்பிக்கவேண்டிய பிரேரணைகளை 14 நாள்களுக்கு முன் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

சேதுவிபுலானந்தா.
செயலர்

201. கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.
14-01-98

(சி-2649)

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

## கஜீபன் ஜுவல்லறி

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்:

**கஜீபன்**
**ஜுவல்லறி**
**தங்க வைர நகை வியாபாரம்**
கே. கே எஸ். வீதி, கோண்டாவில்.

(52598)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### சரவணமுத்து வேலுப்பிள்ளை

[ஆயுர்வேத வைத்தியர் உசன்]

ஊரும் உன் பணியை நாடிவர
போதுமுன் பணியென காலனும் ஓடிவர
தேடும் எம் விழிகள் நீரால் கசிந்துரு
வாழும் எமை எல்லாம் வாழ வைத்த

எமது அன்புத் தெய்வத்தின் மறைவு கேட்டு ஓடோடி வந்து பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும், நேரிலும் அஞ்சல் வழியாகவும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், வெதுப்பக உரிமையாளர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன்

நாளை 15 - 01 - 98 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேட்டுக்கொள்கிறோம்.

- குடும்பத்தினர்

மனோஅம்பாள் வெதுப்பகம்,
உசன், மிருசுவில்.

(சி/2627)

## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி ; 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் (15-01-98)





### அமரர் R. S. இராமலிங்கம்

மலர்வு: 17 - 06 - 1903
உதிர்வு: 26 - 12 - 1976

பாசத்தோடு அரவணைத்து பண்போடு எமை வளர்த்து பாரினில் நேரிய வாழ்வளித்த அன்புத் தந்தையே!

மார்கழித் திங்களில் விநாயகர் விரதமன்று விண்ணுலகு புகுந்த தாங்கள் அதே விரதமன்று அன்னையையும் அரவணைத்துக் கொண்டீர்கள்.

நல்லறமாம் இல்லறத்தில் இணைந்து வாழ்ந்தது போல் விரதகாலம் பார்த்திருந்து விண்ணுலகிலும் இணைந்தீர்கள்!

இருபத்தோராண்டுகள் ஓடி மறைந்தாலும் நீங்காத நினைவலைகள் எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்.

### அமரர் பராசக்தி இராமலிங்கம்

மலர்வு: 07 - 06 - 1911
உதிர்வு: 16 - 12 - 1997

பாசமிகு அன்னையாய் அன்பான மாமியாய், அருமை மிகு பேர்த்தியாய், பூட்டியாய், அனைவருக்கும் வழிகாட்டியாய், சிவத்தொண்டிற் சிறந்த புண்ணியவதியாய், பெருமையுடன் வாழ்ந்து பரமனடி சேர்ந்துவிட்ட அன்புத் தெய்வமே! எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

15-01-98 வியாழக்கிழமையன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேட்டுக் கொள்ளுகிறோம்.

— மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''சக்தி''
[மகளிர் கல்லூரிக்கு முன்பாக]
தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

(சி/2634)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் இராமலிங்கம் தம்பிப்பிள்ளை

(நவரத்தினம் C T B, மாதகல்)

மலர்வு: 30 –7–1918
உதிர்வு: 26 –1 –1997

திதி: 15-01-98

எங்கள் அன்புத் தெய்வமே!
குடும்பத்தின் ஒளி விளக்கே!
எங்களை வாழவைத்து விட்டு
மீளாப்பயணம் சென்று விட்டீர்!
ஆண்டு ஒன்று சென்றதுவே!
தேடுகிறோம் எம் அப்பையாவை
திரும்பி எப்போது வருவீர்?
உங்கள் பசுமையான நினைவுடன்
உங்களை மீண்டும் காணமாட்டோமா
என்று ஏங்கித்தவிக்கின்றோம்,
உங்கள் ஆத்மா சாந்தியடைய தில்லை
நடராசரிடம் கரம் கூப்பி வேண்டுகின்றோம்.

பாசத்துடன்: மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொட்டிலடி.
சங்கானை.

(52609)

அரைகுறையான தீர்வுகளுக்கு துணைபோகின்ற,
எதிர்த்துக் குரல் கொடுக்காத சக்திகளைத் தோற்கடிப்பதற்காக
ஈ.பி.டி.பியின் கரங்களைப் பலப்படுத்துவீர்!

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) X

(ஏ-0015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் (வ-து)

## கிளைக்குழுத் தேர்தல் - 1998

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தின் 23 கிளைகளுக்குமான கிளைக் குழுத் தேர்தல் நியமனப்பத்திரங்கள் 17-01-98 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் முற்பகல் 10 மணிக்குமிடையில் அவ்வக்கிளை நிலையங்களில் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். தேர்தலில் பங்குபற்றத் தகுதியுள்ளோர் தத்தமது கிளை நிலையங்களில் ரூபா 10/ ஐச் செலுத்தி உரிய நியமனப் பத்திரங்களைப் பெற்று பூரணப்படுத்திச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சி. ஜயாத்துரை,
தேர்தல் உத்தியோகத்தர்,
சாவ. ப. நோ. கூ. சங்கம்.

கூட்டுறவு அலுவலகம்,
18/10 லவமன் வீதி,
யாழ்ப்பாணம். (சி-2581)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 05 — 1931

மறைவு: 25 — 01 — 1997

## அமரர் சோ. க. நடராசா


(இளைப்பாறிய இ.போ.ச. நடத்துனரும் பிரபல வர்த்தகரும், மொந்திபுலம், காரைநகர்)

உம்முடலைக் காணாது உருகி யாம் அழுகின்றோம்
உங்களது செய்கைகளை எண்ணி நாம் ஏங்குகிறோம்
எம்மைய என்று சொல்லி ஏங்கித் தவிக்கின்றோம்
ஏனெமக்கு இந்தவிதி வந்தொன்றிச் சேர்ந்ததையா?
அம்மையப்ப ராயிருந்த அன்புத் தந்தையே! நீர்
ஆவிபிரிகையிலே என்ன நினைத்தீரையா?
செம்மையாய் உமது வழி நிற்போமையா
சிவன் கழல் சேர்ந்தே நீர் வாழுமையா!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ந. உதயகுமாரன்
(கண்ணன்)
இல. 17, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம் (52590)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 02 — 1921

மறைவு: 25 — 01 — 1997

## திருமதி சரஸ்வதி விஜயரெட்ணம்

(பேபி அம்மா)

திதி: 14-01-1998

ஆண்டொன்று ஓடி மறைந்த போதிலும்
ஆறாது அம்மா எம் மனத்துயர்
அவனியில் எம்மை அன்புடன் அரவணைத்த
அன்னையின் அன்பு முகம் காணாது
ஓயாத அலை போன்று தீராத துயருடனே
ஓராண்டு நினைவு நாளினிலே— நின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

75/10 A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (52611)

## கிராமியவங்கி புதிய கட்டடத்தில்

நெல்லியடி, ஜன. 14

கருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமியவங்கி வாடிக்கையாளர்களின் நலன் கருதி சங்கத் தலைமைக் காரியாலயத்துக்கு அருகில் உள்ள புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

## மாதாந்த அறிவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 14

இணுவில் தெஸ்பியன் கலை வட்டத்தினர் நடத்தும் 13 ஆவது மாதாந்த அறிவியற் கருத்தரங்குத் தொடர் இன்று புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் இணுவில் மத்தியகல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

''நாடக ஒளியூட்டுகை'' என்ற தலைப்பில் நா. சுந்தரலிங்கம் கருத்துரை வழங்குவார். (இ-7)

## வடமராட்சிப் பகுதியில் சுவரொட்டிகள்

வடமராட்சி, ஜன. 14

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

தேர்தலில் போட்டியிடும் சில கட்சிகள் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளை அழைத்து தேர்தல் தொடர்பாக கருத்துக்களைப் பரிமாறி ஆதரவு திரட்டி வருகின்றன. [இ-173]

## தொற்று நோய் ஆபத்து

நெல்லியடி, ஜன. 14

துன்னாலை தெற்கு மின்டன் வாய்க்காலில், மழைநீர் தேங்கி நிற்பதனால் அப்பகுதியில் தொற்று நோய் பரவும் ஆபத்து உருவாகியுள்ளது (இ-109)

## நிவாரண அட்டைகள் மீளாய்வு

செம்பியன்பற்று, ஜன. 14

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் மீனவ நிவாரணம் பெறுவோர், இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறுவோர் ஆகியோரின் நிவாரண அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு நேரடியாக மீளாய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளதாக மருதங்கேணி உதவி அரச அதிபர் எஸ். சுபதி தெரிவித்தார். (இ-36)

## குருபூசை

கொழும்புத்துறை, ஜன. 14

சிவயோக சுவாமிகள் சமாதியடைந்த ஆயிலிய நட்சத்திரமான இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளின் ஆச்சிரமத்தில் குரு பூசை வழிபாடுகள் அனுஷ்டிக்கப்படுகின்றன. (இ-7)

## சிறிசேன கூரே நாடு திரும்பினார்

கொழும்பு, ஜன. 14

கடந்தகால அரசியலில் விவாதங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் உட்பட்டவரான முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே கடந்த சனிக்கிழமை நாடு திரும்பினார்.

சிறிசேன கூரே நாடு திரும்பியதையடுத்து அவரது அனுதாபிகளும் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி [illegible] உறுப்பினர்களும் அவரது இல்லத்துக்குப் பெருமளவு சென்று வருகின்றனர். (இ-10)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் தருமலிங்கம் கதிர்காமநாதன்

(கறுமு)

(சாந்தி ரால்ஸ்பேரட் உரிமையாளர்)

பிறப்பு: 12-04-1948

அழைப்பில்: 25-01-1997

கருவில் உருவாகி களியில் வலம் வந்து
கருணை வடிவாகி கனவில் வலம் வந்து
களிப்பில் எமையாழ்த்தி கடம்பன்
கவிபாடி வந்த எம் பிதாவே!
கதிர் கதிராகிச் சென்றதெங்கே?
காலமதில் துடிக்கின்றோம்
கற்பொற்பதம் போற்றிடவே!
ஓராண்டு சென்றாலும் — நின்
ஒளி என்றும் மங்காது
பாசத்துடன் இரைச்சுகின்றோம்,

— குடும்பத்தினர்

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. (52587)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 22 — 03 — 1940

இறப்பு: 25 — 01 — 1997

## அமரர் நாகமுத்து செல்லையா

(பிரபல வர்த்தகர்)

அன்போடு எம்மை ஆதரித்து வளர்த்தீரே அப்பா!
பண்போடு வாழ்ந்து எம்மைப் பரிதவிக்க விட்டீரே!
ஓராண்டு சென்றாலும் உம் நினைவு மாறாது;
தீராது நம் கவலை; தெய்வமாகி விட்டீர் நீர்!

மனைவி, பிள்ளைகள்.

மருதங்கேணி,
தாளையடி. (52607)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 08 — 1960

உதிர்வு: 26 — 12 — 1996

## திருமதி கௌரி சுந்தரமூர்த்தி

(ஆசிரியை, யா/இணுவில் மத்தியகல்லூரி)

திதி: 14 — 01 — 1998

எம் நெஞ்சங்களில் என்றென்றும் அணையாத சுடராக ஒளி வீசும் எங்கள் குலவிளக்கே! தங்கள் ஆத்மா சாந்தி அடைய என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்

இணுவில் கிழக்கு,
இணுவில். (52591)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விடிவு பிறக்க.....

இன்று தைப்பொங்கல். மங்களகரமான நாள். தமிழர்களின் நன்றிப் பண்பைப் பிரதிபலிக்கும் பாரம்பரியப் பண்டிகை.

உலக மக்களுக்கு உணவளிப்பவன் உழவன். அவனது உழைப்பு நெல் மணிகளாக்குவதற்கு உறுதுணையாக விளங்குபவன் உதயன் — கதிரவன். கடல் நீரையும், நில நீரையும் மழையாக மாற்றிக் கொடுப்பவன் உதயனே. அவனைப் போல விவசாயிகளுக்கு புலத்தில் கைகொடுப்பவை எருதுகள்.

இரு சாராருக்கும் நன்றி செலுத்த எழுந்ததே பொங்கல் பண்டிகை. உழவன் மட்டுமன்றி அனைது சார்பில் தமக்கு உணவு கிடைக்க உதவிய உதயனுக்கு ஏனைய மக்களும் நன்றி செலுத்துகிறார்கள். பொங்கிப் படைத்துச் சூரியனைத் துதிக்கிறார்கள்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் நம்பிக்கை.

ஈழத்தமிழர்களை பொறுத்த வரை பல தைப்பொங்கல்கள் வந்துபோய் விட்டன. ஆனால் அவர்கள் நம்பியது போலக் கடந்த ஆண்டுகளில் வழி எதுவும் பிறந்ததில்லை.

அவல வாழ்வையும், அச்சமும், துன்பமும் மலிந்த வாழ்வையுமே தமிழர்கள் தொடர்ந்து சந்தித்து வருகிறார்கள்.

அகதி வாழ்வுக்கு இன்னும் முடிவு வரவில்லை. இடம் பெயர்ந்தவர்களாக உணவுக்கும் வழியில்லாமல் இன்னற்படும் நிலை இன்னும் மாற்றப்படவில்லை. அவர்களின் வாழ்க்கையில் இன்னும் விடிவு உண்டாகவில்லை; ஒளி பிறக்கவில்லை; இருளே சூழ்ந்துள்ளது

இந்தத் தைப்பொங்கலாவது தமக்கு விடிவைக் கொண்டு வர உதவுமா என்பதே தமிழர்கள் ஒவ்வொருவரதும் ஆவலாக உள்ளது. அந்த ஆவல் ஏக்கம் நிறைந்தது என்பதனை மறப்பதற்கில்லை.

தமிழர்களின் இன்னல்கள் நீங்குவதற்கு அவர்களுக்குரிய உரிமைகள் கிடைக்க வேண்டும். அரசாங்கம் வழங்கும் சலுகைகளால் இன்னல்கள் போகமாட்டா; அவ்வாறு போயினும் தற்காலிகமானதே.

தமிழர்களின் அன்றாடப் பற்றாக்குறைகள் — பிரச்சினைகள் — பலவும் இன்னும் தீர்க்கப்படவில்லை. அவற்றுக்குத் தீர்வு காணப்பட்டாலும் தமது வாழ்க்கையில் விடிவு கிடைக்கும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை.

தமிழர் வாழ்வில் விடிவு என்பது அவர்களுக்குச் சேரவேண்டிய நியாயமான அரசியல் உரிமைகள் கிடைத்த பின்னரே சாத்தியம்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் வழங்க விரும்புபவைக்குமான இடைவெளி குறையவேண்டும் இல்லையேல் தமிழரின் அரசியல் விடிவு தூரத்திலேயே தள்ளி நிற்கும்.

இதனை உணர்ந்து நாட்டின் சகல அரசியல் தலைவர்களும் உழைக்க வேண்டும். வெறும் சலுகைகளும், அரை குறைத் தீர்வுகளும் நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் கொண்டு வரமாட்டா.

தென்னிலங்கைத் தலைவர்கள் இதனை நன்றாக உணர்ந்து அதன் பிரகாரம் செயற்பட்டால், இன்றைய தைப்பிறப்பு வழி பிறக்க உதவும் என நம்பலாம்.

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 14

கீரிமலை மகளிர் தவ நிலையத்தின் பதினொராவது ஆண்டு விழாவும், தைப் பொங்கல் விழாவும் இன்று புதன் காலை 9 மணி முதல் இல. 20 செம்மணி வீதியில் உள்ள தவ நிலையத்தில் இடம்பெறும் (இ-7)

★ ★ ★

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலை பண்பாட்டுக் கழகம் நடத்தும் பொங்கல் விழா இன்று புதன் காலை 6 மணிக்கு பூரண பொங்கலுடன் ஆரம்பமாகும்.

பிற்பகல் 2 மணிக்கு ஆதீன கலை பண்பாட்டுக்கழகமும், கல்விக் கழகமும் இணைந்து வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் தொடர்ந்து திருவெம்பாவை வீதி பஜனையில் பங்கு கொண்டோருக்கான பரிசளிப்பு விழாவும் இடம் பெறும். (இ- 7)

★ ★ ★

சுழிபுரம் கவிதாலயா இசைக் குழுவினர் வழங்கும் 'இராக ஜாலங்கள்' இன்னிசை நிகழ்ச்சி தைப்பொங்கல் தினமான இன்று புதன் பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பட்டின சபைக் கலை அரங்கில் நடைபெறும். (இ-7)

★ ★ ★

வண் — வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், மாதர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் காரியாலயத் திறப்பு விழாவும், முன்பள்ளி ஆரம்ப தினவிழாவும் தைப்பொங்கல் தினமான இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

நல்லூர் பிரதேச சபை விசேட ஆணையாளர் எஸ். வேல்முருகோன்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-7)

★ ★ ★

யாழ் திருமறைக் கலா மன்றம் வழங்கும் பொங்கல் விழா இன்று புதன் காலை 6. 30 மணிக்கு பூரண பொங்கலுடன் ஆரம்பமாகும்

சிறப்பு நிகழ்ச்சிகளாக மாலை 6 மணிக்கு நடனம், கவியரங்கம் மற்றும் எங்கட பிள்ளையள் நாடகமும், தீர்க்க சுமங்கலி இசை நாடகமும் இடம்பெறும்.

★ ★ ★

கல்வயல் அருள்மிகு ஐயனார் ஆலயத்தில் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு இன்று புதன் காலை 8 மணிக்கு மகரஜோதி விழா இடம்பெறும். (இ-7)

★ ★ ★

கோண்டாவில் - தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோயிலில் இன்று 14 ஆம் திகதி புதன் கிழமை காலை 6 மணிக்கு சங்கிராந்தி உற்சவமும், தைப்பொங்கலும் விசேட அபிஷேகம், பூசையும், பிரார்த்தனைவழிபாடுகளும், கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (இ 30)

★ ★ ★

குருநகர் சென்றோக்ஸ் சன சமூகநிலைய இளைய தலைமுறைக்கழகம் பொங்கல் விழாவை நிலையக் கலையகப் பூங்காவில் இன்று நடத்த உள்ளது.

பொங்கல் விழாவை முன்னிட்டு கலை நிகழ்சிகள் நாளை சென்றோக்ஸ் சன சமூக நிலைய யோகம் கலையரங்கில் இடம்பெற உள்ளன. இதில் நடனம், இசை, மரபுவழி கலைஞர் தைரியநாதனின் மேடைப் பாடலடங்கிய பேட்டி நிகழ்ச்சியும், சென் றோக்ஸ் வான்மதி கலையகத்தின் ''அதாண்டா இதாண்டா'' என்னும் நகைச்சுவை நாடகம் ஆகியவை இடம்பெற உள்ளன.

★ ★ ★

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக்கழகம் நடத்தும் பொங்கல் கலை விழாவும் விளையாட்டுப் போட்டிப் பரிசளிப்புவிழாவும் இன்று பிற்பகல் 2.30மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கலை அரங்கில் கழகத் தலைவர் இ. கிருபராசா தலைமையில் நடைபெறும். (இ-51)

★ ★ ★

பண்ணாகம் ஸ்ரீமுருகன் இந்து சமயவிருத்திச் சங்கம் நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று பிற்பகல் 1.00 மணி முதல் பண்ணாகம் ஸ்ரீமுருகன் அன்னதானசபை மண்டபத்தில் நடைபெறும். சிறப்புச் சொற்பொழிவுகள், கவிதை நிகழ்வு, வினாடி வினாப் போட்டி, பட்டிமன்றம் ஆகியவையும் இவ்விழாவில் இடம்பெறும்.

## நாளை

### தை 2

வியாழக்கிழமை

திதி: திருதியை

பின்இரவு 2.25 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

முற்பகல் 11 35 வரை.

பட்டிப் பொங்கல் நாள்

சரிநாள்.

சுபநேரம்: 8.04-.934

ராகுகாலம்: 2 04 3 34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## வேலையிழந்த தபால் ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஜன. 14

இடம்பெயர்வு காரணமாக வேலை இழந்த — தபால் திணைக்களத்தைச் சேர்ந்த — 17 ஊழியர்களையும் நாளை காலை 9 மணிக்கு யாழ். அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ். தர்மராஜன் கேட்டுள்ளார். (உ-3)

## கடைய...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த உண்ணாவிரதம் இன்று நிறுத்தப்படும் என்றும் —

இனி வேறு விதமான போராட்டம் மேற்கொள்ளப் படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — இவரை நாடு கடத்தக் கூடாது என்று கோரி நேற்று உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ-3)

## நாளை

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-7)

## ஈ.பி.ஆர்.எல். ..

(முதலாம் பக்கத் தொடர்)

றுக் கொள்வதில் ஆட்சேபனை ஏதுமில்லை என்று தெரிவித்தார்.

ஏனைய பிரதிவாதிகளான - தேர்தலில் போட்டியிடுகின்ற மற்றைய கட்சிகளின் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

இதனையடுத்து —

மேற்படி தேர்தல் தொடர்பாக பிரசாரத்துக்கு தங்களுக்குக் காலம் போதாது என்று தெரிவித்து தேர்தல் முடிவுகளையோ, தேர்தல் திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளையோ ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யக் கூடாது என்ற நிபந்தனையுடன் —

ஈ. பி. ஆர். எல். எவ்வின் வேட்பாளர் பட்டியல்கள் ஐந்தையும் ஏற்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, வலிகாமம் வடக்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேச சபைகளுக்காக சமர்ப்பிக்கப் பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வேட்பு மனுக்களையும் ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

# முஸ்லிம் இளைஞர் வவுனியாவில் படுகொலை

வவுனியா, ஜன. 14

வவுனியா சூடுவெந்த புலவு என்னும் முஸ்லிம் கிராமத்தில் நேற்று முஸ்லிம் இளைஞர் ஒருவர் ஊர்காவலரான சிங்கள இனத்தவர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரும், அந்த ஊர்காவலரும் இணைந்து உழுந்து விதைத்ததாகவும் —

அதில் ஏற்பட்ட தகராறே இந்தக் கொலைக்கு காரணம் என்றும் — கூறப்பட்டது.

வெள்ளைப்பன் அன்சார் (26 வயது) என்ற அந்த முஸ்லிம் இளைஞனின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு, மரண விசாரணை நடைபெற்றது.

வவுனியா பதில் நீதிவான் மு. சிற்றம்பலம் மரண விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. (உ-3)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்)

ரணையை நேற்று ஆரம்பித்தது.

தங்களது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இரு மனுக்களும் நீதியரசர்கள் ஹெக்டர் யாப்பா, லினியன் ஜயசூரிய ஆகியோர் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதற்கு முன்பதாக ஈ.பி. ஆர்.எல் எவ் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது தொடர்பாக இணக்கம் காணப்பட்டிருந்தது.

அது போன்று கூட்டணியின் மனுக்களையும் ஏற்றுக் கொண்டால் என்ன என்று நீதியரசர்கள் கேட்டனர்.

சட்டமா அதிபர் மற்றும் தேர்தல் ஆணையாளர் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் கே.ஸி. கமலசபேசன் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

ஆனால் புளொட்டின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தங்கள் கட்சிக்காரர்கள் அதை எதிர்ப்பதாகத் தெரிவித்தார் அதைத் தொடர்ந்து கூட்டணியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். கே. டபிள்யூ ராஜா குணசேகரா, கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் கூட்டணியின் வேட்பு மனுக்களை ஏற்கக் கோரி சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வாதிட்டனர்.

விசாரணை நாளை வரை ஒத்திவைக்கப்பட்டது.

புளொட்டின் சார்பில் சட்டத்தரணி பாயிஸ் முஸ்தாபாவுடன் சட்டத்தரணிகள் சஞ்சே குணவர்த்தனா, அ. விநாயக மூர்த்தி ஆகியோர் ஆஜரானார்கள். (உ-3-21)

## வெடி விபத்...

(முதலாம் பக்கத் தொடர்)

னாரில் நடந்த தவறுதலான வெடிவிபத்து ஒன்றில் லெப்டினன்ட் கேணல் குமார் (சிங்கராசா செல்வகுமார்— யாழ்ப்பாணம்) என்பவர் களப்பலியானதாகவும் ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (உ-3)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

1998 ஆம் ஆண்டுப் பொதுக் கூட்ட

## அறிவித்தல்

அனைத்து வர்த்தகர்களுக்கும்
எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

1998 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவும் **1998 — 01 — 24** ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு எமது கழகப் பணிமனை முன்றலில் நடைபெறும். அங்கத்தவர் யாவரும் வர்த்தகஸ்தாபனங்களைப் பூட்டித் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். நிகழ்ச்சிநிரல், அழைப்பிதழ் அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

1996 ஆம் ஆண்டு (1995 ஆம் ஆண்டுக்கான) விஷே—புலமைப்பரிசில் 5 ஆம் ஆண்டு, 1997 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சைகளில் அதிக கூடிய புள்ளிகள் பெற்ற பன்னிரண்டு மாணவர்களைப் பாராட்டி, கௌரவித்து பரிசில்கள் வழங்கும் வைபவமும் அன்று நடைபெறும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தி.குஞ்சித பாதம் — தலைவர்
சி.நமசிவாயம் — செயலாளர்

(சி/2644)



அன்பர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
பொங்கல் நல்வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்
தரமான துர்க்கா சீயாக்காய் பவுடரை
பெற்று பயன்பெறுக
நனைந்த அரிசி அரைப்பதற்கும்
துர்க்கா மில்லை நாடுங்கள்
வெகு விரைவில் அறிமுகமாகும்
துர்க்கா பற்றி சார்ச்
அந்த நன்நாளை எதிர்பாருங்கள்
பின்னர் அறிவிக்கப்படும்.

## துர்க்கா மில்ஸ்

பொன்னாலை வீதி,
மானிப்பாய்.
(தெல்லிப்பழை)

(சி-2628)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 23 சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்)

யாள அணிவகுப்பில் ஆஜர் செய்யப்பட்டனர்.

176 ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுடன் கலந்து சந்தேக நபர்கள் நிறுத்தப்பட்டனர்.

ஐந்து புதியமாணவர்களும், விரிவுரையாளர் ஒருவரும் சாட்சிகளாக ஆஜராகி 23 சந்தேக நபர்களை அடையாளம் காட்டினர். அந்த சந்தேக நபர்கள் மீதான விளக்கமறியல் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. இருபத்திநான்காவது சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டார். (உ-21)

## படை - பொலீஸை...

(முதலாம் பக்கத் தொடர்)

தலைமை தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி ஒருவரும், 100 உதவித் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்துடன் வாக்குச் சாவடி பொறுப்பு உத்தியோகத்தர்களாகவும், உதவி பொறுப்பு உத்தியோகத்தர்களாகவும் 422 பேர் நியமிக்கப்படுவார்கள் என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-3)


கண் ஒளி மங்கிய வேளை மின் ஒளியாய்
உங்கள் கண்மணிகள் புத்துயிர் பெற்று
முழு நிலவாய் ஜொலித்திட கண் ஒளியின்
கலங்கரை விளக்கமாய்த் திகழும்

எரிக் கணேஷ் நிறுவனத்தினரின்
பொங்கிடும்மங்கலப் பொங்கலின்வாழ்த்துக்கள்



"மங்கிடும் பார்வை கொண்ட உங்கள்
விழிகள் பொங்கிடும் பார்வை பெற

"விழி ஒளிங்களிடம் அந்தன் ஒளி
எங்களிடம் என அழைப்பார்கள்"

எரிக் கணேஷ்

உங்கள் முகப் பொலிவுக்கு ஏற்றவாறு இறக்குமதி செய்யப்பட்ட அழகிய பிறேம்களில் உங்கள் கண்களுக்குரிய சரியான மூக்குக் கண்ணாடிகளைப் பொருத்திப் பெற்றிடவும்.

போட்டோ கிறே, போட்டோ பிறவுண், கண்ணாடிகள் சகல பவர்களிலும் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

எரிக்கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/2606)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது தைப்பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறார்கள் சுப்பஸோ வீடியோ ஸ்தாபனத்தார்.

எமது புதிய வெளியீடு
"சுப்பஸோ" வின்

★'காட்சியும் கானமும்' - CD
Vol: 3

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/2645)

NEW SCIENCE HALL
(Kannathiddy Road, Jaffna)

PURE / APPLIED
MATHS

A/L 97, 98

துரித மீட்டல் வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.
(திங்கள், புதன், வெள்ளி
காலை 8.00 - 11.00)

ஆசிரியர் :
A. பத்மநாதன்
(சி/2601)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மங்களம் பொங்கிட எமது இதயம் கனிந்த
பொங்கல் நல் வாழ்த்துக்கள்

எண்ண நகை யுகத்து வனமார் வகையனைத்தும் எண்ணம் போல் தேர்ந்தெடுக்க ஏற்றதோர் நகைமாடம்
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளவும்
சிங்கப்பூர் நகைகளை தெரிவு செய்யவும் வேறு எங்கே செல்ல வேண்டும்

சாரங்கா நகைமாடம்

177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இணையகம்)

அருள்முருகன் நகையக ஸ்தாபகர் அமரர் இ. பஞ்சாட்சரம் அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவாகவும்,
சாரங்கா நகை மாடம் ஸ்தாபித்து முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டும்
தைமாத இறுதிவரை விஷேட கழிவு முந்துங்கள்! முந்துங்கள்!!

அருள் முருகன் நகையகம்
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தலைமையகம்)

சிவா நகைமாடம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
(இணையகம்)

பழைய நகைகள் கூடுதலான பெறுமதிக்கு வாங்கப்படும். (சி/2611)

ஆதரவாளர்கள் அனைவருக்கும் பொங்கிடும் மங்களப்
பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

தரம் — நிரந்தரம், சுவை — தித்திக்கும் தேன்சுவை யாழ் நகரில் ஒரு குளிர் ஊற்று. குளிர்பான வகைகளின் சங்கமம்
பெண்கள் மற்றும் குடும்பமாய் வருவோரின் வசதி கருதி
புத்தாண்டு முதல் மேல் தளத்தில் புதிய பகுதி ஆரம்பம். ஐஸ்கிறீம், குளிர்பான, சிற்றுண்டி வகைகள் இன்னும் என்னென்ன வேண்டும்.
நீங்கள் வரவேண்டும்.

லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி2612)

வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய
பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

ஜெசிபா ஏஜென்சி
JEISHEBA AGENCY

யாழ். நகரில் கட்டடப் பொருள்கள் அனைத்தும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்:

132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2613)

132, Stanley Road,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-01-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது